ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு அடுக்குக் குடியிருப்பு சொத்துரிமைச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குக் குடியிருப்பு சொத்துரிமைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு எங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்ல, நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. எச்சரிக்கையாகவும் எடுத்துக்கொள்கிறோம். காரணம், இந்த ஆண்டு நிறைவிலே என்ன செய்தோமோ, அதைப்போன்று 4 மடங்கு, 5 மடங்கு அடுத்த ஆண்டு செய்ய வேண்டுமென்ற எச்சரிக்கையாகவும் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குக் குடியிருப்பு சொத்துரிமைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 1–10

6. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 36 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(ஆ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை
(இ) கோரிக்கை எண் 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை
(ஈ) கோரிக்கை எண் 1– – மாநில சட்டமன்றம்
(உ) கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(ஊ) கோரிக்கை எண் 16 – நிதித் துறை
(எ) கோரிக்கை எண் 35 – மனித வள மேலாண்மைத் துறை
(ஏ) கோரிக்கை எண் 50 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(அ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்*